1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்த டெப்பாசிட் ஓர்க் என்பதன் படி பணத்தை அவர்கள் கட்டிவிடுகிறார்கள். (Execution side of it) பணத்தைக் கட்டினால் தான் எழும். இதுதான் நான் அறிந்துள்ள பொருளாகும். டெப்பாசிட் கட்டி விடுகிறார்கள் என்பது தான் அதன் பொருள்.

கும்பகோணத்தில் அரிசன நலத்துறைக்கு நில ஆர்ஜிதம்.

* வினா எண். 448—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகரத்தில் அரிசன நலத்துறைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள இடத்தில் 25 வீடுகள் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) வீடுகள் இல்லையென தவறான தகவலுடன் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) கும்பகோணம் நகரத்தில் அரிசன நலத்துறைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள இடத்தில் பிரிவு 4(1) அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்பு எழுப்பப்பட்டுள்ள 22 கட்டிடங்கள் (19 வீடுகளும் 3 மாட்டுக் கொட்டகைகளும்) மட்டுமே இருப்பது அரசுக்குத் தெரியும்.

(ஆ) தீர்ப்பினை வழங்கு முன்பு உரிமை பெறும் நிலங்களை பார்வையிடும்பொழுது, இந்நிலங்களில் 19 வீடுகளும் 3 மாட்டுக் கொட்டகைகளுமாக மொத்தம் 22 கட்டிடங்கள் இருந்தன. இக்கட்டிடங்களிலுள்ளோர் வெளியேறிய பின்னர் நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கி 6–10–78-ல் நிலங்கள் கையகப் படுத்தப்பட்டுள்ளன. எனவே மாறான தகவலுடன் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஆகவே இதனை அரசு பரிசீலனை செய்யத் தேவையில்லை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரிசன மக்களுக்கென்று நில ஆர்ஜிதம் செய்யப்படுவதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. அப்படி ஆர்ஜிதம் செய்த நிலங்களை உடனடியாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதிலும் ஆட்சேபனை கிடையாது. ஆனால் இந்த

[1979 மார்ச் 17

இடத்தில் என்ன நடந்திருக்கிறது என்று பார்க்கிறபோது அரசு அறிவித்த பின்னால் அந்த விவரம் புரியாத மக்கள் அந்த நிலத்தை வாங்கி இருக்கிறார்கள். இதுதான் இதிலே பரிதாபகரமான விஷயம். அப்படி வாங்கியதோடு மட்டுமல்ல, 10 ஆயிரம் 20 ஆயிரம் என்று செலவழித்து வீடுகளையும் கட்டிவிட்டார்கள். ஆனால் இப்போது கட்டிய வீடுகளை இடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அரிசனங்களுக்கு என்று நிலங்களை ஆர்ஜிதம் செய்கின்றபோது, அப்படிப்பட்ட இடங்களை விற்கவும் முடியாமல், யாரும் வாங்கவும் முடியாமல் செய்கின்ற அளவுக்கு அரசு அறிவிப்பு செய்ய முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த நிலத்தை வாங்கிய மக்கள் விவரம் புரியாமல் வாங்கி விட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். அவர்கள் விவரம் தெரிந்த பிறகுதான் வாங்கியிருக்றார்கள். இந்த நிலம் இரத்தினசபாபதி செட்டியார் என்பவருக்குச் சொந்தமானது. அவர் புத்திசாலித்தனமாக கருப்பையா படையாச்சி என்பவருக்கு விற்றிருக்கிறார். அவர் புத்திசாலித்தனமாக அந்த நிலத்தை இவர்களுக்கு விற்றிருக்கிறார். எல்லோரும் சேர்ந்துகொண்டு அரசை ஏமாற்றப் பார்த்தார்கள். இறுதியில் அவர்கள்தான் ஏமாந்து போனார்கள்.

திரு. எஸ். ஆர். ராதா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது புத்திசாலித்தனமாக மாத்திரம் அல்ல. மிகப் பெரிய தவறு நடந்திருக்கிறது. அதனால் ஏறத்தாழ ஒரு பத்தாண்டுக் காலம் அங்கே இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் வீடுகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த அரசு அவர்களுக்கு நிலம் அளித்திருக்கிறது. ஆகவே, அந்த நிலங்களில் விரைவில் வீடு கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஏமாற்றுபவர்களையும் விட்டுவிடத் தயாராக இல்லை, ஏமாந்து போனவர்களையும் விட்டுவிடத் தயாராக இல்லை. ஆகவே, அவசியம் வீடு கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்வது போல் நில ஆர்ஜித நடவடிக்கை எடுத்த பிறகு அரசாங்கத்தை ஏமாற்றுகிற அளவுக்கு இதுபோன்ற சம்பவம் நடைபெற்றிருக்கிறது. எனவே, அதற்குரிய நஷ்ட ஈட்டும் தொகை வாங்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல. இது மிகப்

[1979 மார்ச் 17]

பெரிய கிரிமினல் குற்றமாகும். அதிலேயும் அரிசன மக்களுக்காக வீடு கட்டுவதற்கென்று ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திலே இவ் வாறு நடந்திருக்கிறது. ஆகவே, இதிலே கிரிமினல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நிலத்தை கையகப்படுத்தும்போது யார் சொந்தக்காரர்களாக இருந்தார்களோ அவர்களுக்குத்தான் நஷ்டயீட்டுத் தொகை வழங்குவது வழக்கம். பின்னால் வாங்குபவர்களுக்குத் தர முற்படுவோமானால் இன்னும் பல தவறுகள் ஏற்பட ஏதுவாகும். இது போன்ற தவறுகள் செய்பவர்கள்மீது அரசாங்கம் கண்டிப்பாக கிரிமினல் நடவடிக்கைகள் எடுப்பதற்கு இனிமேல் முன்வரும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஹரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக இரண்டாண்டுகளுக்கு முன்பு லான்ட் அக்விஸிஷன் ஸ்பெஷல் தாசில்தார்கள் போட்டும் இந்தளவு தாமதத்திற்குக் காரணம் என்ன ? கடந்த ஒரு ஆண்டுக்காலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால் அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மூலக்கேள்வி கும்பகோணத்தைச் சேர்ந்த உள்ளூர் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அசலூர் பற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போடவும்.

திரு. என். கிட்டப்பா : தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வீடுகள் கட்டித் தரப்படுவது பற்றிய கேள்வியையொட்டி, மாயூரம் பகுதியில் நந்தனார் பிறந்த இடத்தில், மேலாநல்லூரில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, நந்தனார் வசித்ததாகச் சொல்லப் படுகிற இடத்தில் அதே தெருவில் 27 வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கும்பகோணத்தில் அரிசன நலத்துறைக்கு நில ஆர்ஜிதம் பற்றியது.

திரு. என். கிட்டப்பா : நான் பல தடவை கேட்டிருக்கிறேன். நீண்ட கால வினா கொடுத்தாலும் மறுக்கிறார்கள், ஷார்ட் நோட்டீஸ் க்வஸ்டின் கொடுத்தாலும் மறுக்கிறார்கள். அந்த

27 வீடுகள் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. முன்னால் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஏற்பாடு என்று சொன்னார்கள், ஒத்துக் கொள்கிறேன். இந்த 27 வீடுகள் எப்போது கட்டி முடிக்கப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களின் கேள்வியை கூர்ந்து கேட்டேன். அனுதாபத்தோடு கவனிக்கும் இந்த அரசு.

திரு. சி. மாணிக்கம் : இது எந்த ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது ? அப்போது ஆண்டவர்கள் யார் ? காலதாமதத்திற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1971 ஆம் ஆண்டு நில ஆர்ஜித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டைச் சொல்லிவிட்டேன். அப்போது ஆண்டவர்கள் யார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊகித்துக் கொள்ளலாம். தாமதத்திற்கான காரணம், நில ஆர்ஜித நடவடிக்கைகள் குறித்த கால தாமதத்திற்கு காரணம், முதல் சொந்தக்காரர்கள் நிலத்தை இன்னொருவரிடம் விற்று விட்டார். இரண்டாவது சொந்தக்காரர் நிலத்தை இன்னொருவரிடம் விற்றுவிட்டார். அவர் தம்பி கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இன்னும் பல காரணங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மன்னார்குடி தாலுக்காவில் செருகுளத்தூர், கர்ணாவூர் போன்றயிடங்களில் ஆர்ஜிதம் செய்யப்பட்டு மனைகள் வழங்கப்படாமல் இருக்கிறது. காலதாமதமாகிறது. அது விரைவில் கவனிக்கப்படுமா ?

(பதில் இல்லை.)

அரிசன மாணவர்களுக்கு சிறப்பு உதவித் தொகை.

* .வினா எண். 449— திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ் நாட்டில் கல்வி பயிலும் அரிசன மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பில் 60 சதவீதத்துக்கு மேல் மதிப்பெண்கள் பெற்றால் சிறப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறதா?